2012 *மார்ச் 30*]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டநெடிய தூரம் செல்லக்கூடிய பேருந்துகளில் ஏதேனும் சில வழித் தடங்களில் அவ்வாறு இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்துமூலமாகக் கொடுக்கின்றபட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

விபத்துக் காப்பீடு

***6708—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ், பதிவு பெற்ற கல் உடைக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் கல் உடைக்கும் தொழிலாளிகளுக்கு விபத்து ஏற்பட்டால் 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் மாநில ஈட்டுறுதிச் சட்டத்தின்படி காப்பீட்டு வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் மாநில ஈட்டுறுதிச் சட்டத்தின்கீழ் வராத தொழிற்சாலைகளில் பணிபுரியும் கல் உடைக்கும் தொழிலாளிகளுக்கு விபத்து ஏற்பட்டால் 1923 ஆம் வருட பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் இழப்பீடு பெற இயலும். தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வராத இடங்களில்

பணிபுரியும் கல் உடைக்கும் தொழிலாளர்கள் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்திருந்தால் அந்த வாரியத்தின்மூலம் விபத்தின் தன்மைக்கு ஏற்ப உதவித் தொகை வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல் உடைக்கும் தொழிலாளிக்குக் காப்பீட்டுத் திட்டம் வழங்குவோம் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி கூறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

அவசர ஊர்தி

***1118—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சிக்கெனத் தனியாக 108 அவசர ஊர்தி வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

108 அவசர கால ஊர்திகளைப் பொறுத்தவரையில், அந்தந்த மாவட்டங்களினுடைய அவசரத் தன்மை, பிரசவ காலத் தேவைகள், சாலை வசதி, சென்றடைய வேண்டிய தூரம் மற்றும் அதற்கான நேரம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, வாகனங்கள் நிறுத்தும் இடங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்போது 14 அவசரகால ஊர்திகள் செயல்படுகின்றன. பட்டுக்கோட்டையில் உள்ள 108 அவசரகால